**கரூர் மாவட்டம்**

**வாக்குப்பதிவு நாளன்று தேர்தல் பணியாற்றவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான வாக்குசாவடி வாரியாக பணிஒதுக்கீடு மூன்றாவது முறையாக கணினி மூலம் குலுக்கல் - தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தேர்தல் பொது மற்றும் செலவினப்பார்வையாளர்கள் முன்னிலையில் நடத்தினார்**

அதன் விபரம் வருமாறு:

நடைபெறவுள்ள மக்களவைபொதுத்தேர்தலில் கரூர் மாவட்டத்தில் உள்ள 1,031 வாக்குச்சாவடி மையங்கள் (கரூர் மக்களவை தொகுதி முழுவதும் மொத்தம் 1,650 வாக்குச்சாவடி மையங்கள்) அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாக்குச்சாவடி மையத்திலும், ஒரு வாக்குசாவடி தலைமை அலுவலர் மற்றும் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் நிலை அலுவலர்கள், நியமிக்கப்படுவார்கள். அதனடிப்படையில் ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ஒரு அனைத்து மகளிர் வாக்குச்சாவடி மையமும், ஒரு சட்டமன்ற தொகுதிக்கு நான்கு மாதிரி வாக்குச்சாவடி மையமும், என மொத்தம் உள்ள 1,031 வாக்குச்சாவடிகள் மையங்கள் உள்ளன. இந்த வாக்குச்சாவடி மையங்களில் 4,181 நபர்கள் பணிபுரிய உள்ளார்கள். இதுதவிர கூடுதலாக (RESERVE) 835 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் என மொத்தம் 5,016 நபர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்வதற்கான மூன்றாம்கட்ட கணினி முறையிலான குலுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தேர்தல் பிரிவில் 16.04.2019 இன்று தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் 23-கரூர் மக்களவைத்தொகுதிக்கான தேர்தல் பொதுப்பார்வையாளர் திரு.பிரசாந்த் குமார்.இஆப., (PRASHANT KUMAR.IAS), தேர்தல் செலவினப்பார்வையாளர் திரு.மனோஜ்குமார்.இ.வ.ப, (MANOJKUMAR.IRS), திரு.அம்பாட்கர்.எ.தாமோதர் (AMBADKAR A. DAMODAR.IRS) ஆகியோர் முன்னிலையில் மூன்றாம் கட்டமாக கணினிமுறையில் குலுக்கலை நடத்தினார்.

அதனடிப்படையில் 4.181 நபர்களுக்கும் இன்று முதல் அவர்கள் எந்தெந்த வாக்குச்சாவடியில் பணிபுரிய வேண்டும் என்ற கணினி முறையிலான குலுக்கல் நடைபெற்றது. இது தொடர்பான ஆணைகள் மூடி முத்தரையிட்ட உரையிலிட்டு சமந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கபட உள்ளது. நாளை (17.04.2019) நடைபெற உள்ள கடைசிகட்ட பயிற்சி வகுப்பில் முத்தரையிடப்பட்ட உரை பிரிக்கப்பட்டு ஆணை வழங்கப்படவுள்ளது. இதன் பிறகே வாக்குசாவடி தலைமை அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் எந்தெந்த வாக்குச்சாவடியில் பணிபுரிய வேண்டும் என்பது தெரியவரும்.

மேலும் கரூர் மாவட்டத்தில் உள்ள 1031 வாக்குச்சாவடிகளிலும் கரூர் சட்டமன்ற தொகுதிக்கு 22, அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்கு 22, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கு 23, குளித்தலை சட்டமன்ற தொகுதிக்கு 24 என 91 மண்டல அலுவலர்கள் பணிபுரிய உள்ளார்கள். இவர்களுக்கு உதவியாக 3 உதவியாளர்கள் மற்றும் காவலர்கள் பணிபுரிய உள்ளார்கள். மேலும் இவர்களுடன் 91 ஜிபிஆர்எஸ் கருவி பொருத்தப்பட்ட வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மின்னணு வாக்குபதிவு இயந்திரங்கள் காவலர்கள் பாதுகாப்புடன் சமந்தப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளது. இந்த வாகனங்கள் சமந்தப்பட்ட வாக்குச்சாவடிகளுக்குதான் செல்கிறதா என கட்டுபாட்டு அறையிலிருந்து கண்காணிக்கபட உள்ளது.

மேலும், கரூர் மாவட்டத்திற்குட்பட்ட கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம் (தனி) மற்றும் குளித்தலை ஆகிய சட்டமன்றத்தொகுதிகளுக்கு மொத்தம் 3,439 மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களும் 1,552 கட்டுப்பாட்டுக் கருவிகளும், 1,775 வாக்காளர் வாக்குப்பதிவு தணிக்கை இயந்திரங்களும் (VVPAT) தயார் நிலையில் சம்மந்தப்பட்ட தொகுதிகளின் உதவி தேர்தல் நடத்தும் அலுவலகங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திருமதி.செல்வசுரபி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் திரு.சரவணமூர்த்தி (கரூர்), திருமதி.மல்லிகா (கிஷ்ணராயபுரம்) திருமதி.மீனாட்சி (அரவக்குறிச்சி), தேர்தல் பிரிவு வட்டாட்சியர் திரு.சிவக்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**